**தலைப்பு 155 – மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015**

---

தலைப்பு 155 – மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 யூன் 07 ஆந் திகதி வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

---

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 298,435.06 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 226,994.67 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 71,440.39 மில்லியன் அதாவது 23.94 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 233,151.23 | 168,558.30 | 64,592.93 | 27.70 |
| மூலதனம் | 65,283.83 | 58,436.37 | 6,847.46 | 10.49 |
| மொத்தம் | **298,435.06** | **226,994.67** | **71,440.39** | **23.94** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 15501 | 5.00 | 0.95 | 0.50 | 0.90 | 35.00 | 23.18 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் கீழான 03 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 67.64 மில்லியனாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0002/0165/000 | 0.07 |
| 6000/0000/00/0016/0110/000 | 67.22 |
| 6000/0000/00/0018/0109/000 | 0.35 |
| மொத்தம் | **67.64** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (ஆ) | கடமை தொலைபேசிப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 845(1) |
| (இ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 பாதீட்டு முரண்

71 செலவின விடயங்களுக்கு மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் 12 சதவீதத்திற்கும் 100 சத வீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சளவினைக் கொண்டிருந்தன.

### 3.2.2 நிதி ஏற்பாடுகளை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படல்

(அ) 9 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேறிய ஏற்பாட்டில் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் ரூபா 359,367 கூட்டுத்தொகையாக இருந்ததுடன். மீளாய்வாண்டின் இறுதியளவில் அந்த சேமிப்பு ரூபா 2,643,084 இனால் விஞ்சி ரூபா 3,002,451 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 69,995,400 ஆன பொறுப்புக்கள் காணப்பட்டதுடன் அப்பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நிதியேற்பாடு மேற்கொள்ளப்படாமையால் அவை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2013 இன் பாதீட்டு முன்மொழிவின் பிரகாரம் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மூலம் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்கும் ரூபா 1,728.46 மில்லியனான பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும், அப்பொறுப்புக்களை தீர்வு செய்வதற்கு நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

15501 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,083,773 ஆக இருந்தது. அந் நிலுவை மீதிகள் 06 மாதங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலவீச்சில் இருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.4 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதிக் கடனின் கீழ் 13 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் மொத்த தேறிய ஏற்பாடுகளின் கூட்டுத்தொகை ரூபா 25,753.15 மில்லியனாக இருந்ததுடன், அச் செயற்திட்டங்களிற்காக மீளாய்வாண்டின்போது ரூபா 23,691.63 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2015 யூன் 30 ஆந் திகதி அளவில் கணக்காய்வு செய்யப்பட்ட சில வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டம்

10 கிலோ மீற்றர் சாக்கடை குழாய் வழிகள் திருத்த வேலை மற்றும் 125 கிலோமீற்றர் சாக்கடை குழாய் வழிகள் என்பவற்றின் நிலைமையை ஆய்வு செய்வதற்காக ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அவ் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம்

தேவையான களிமண் குழாய்களுக்காக (Clay Pipes) அளவீட்டுப் பத்திரத்தில் 6.3.10.11 b (203) பந்தியின் பிரகாரம் 75N/mm அளான உறுதியினை கொண்டிருக்க வேண்டும். கொழும்பு மாநகர சபையின் பொறியியலாளர்களால் பரிசோதித்த போது அந்த களிமண் குழாய்களில் அழுத்த சக்தி 75N/mm இனை விட குறைவான சுமார் 1020 குழாய்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது.

**(ஆ) மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 திசெம்பர் 23 ஆந் திகதி வரையிலும் செயற்திட்டக் காலம் முடிவடைந்திருந்த கேகாலை மாவட்டத்தின் $SG_2KG_3$ பொதியின் கீழ் அரநாயக்க - அம்பலகந்த வீதி நிர்மாண நடவடிக்கைகள் ஒப்பந்தக்காரரினால் நிறுத்தப்பட்டிருந்தது. காபட் இடப்பட்ட வீதியின் அநேகமான இடங்களில் இரண்டு பக்கங்களும் (Edges) உடைந்து சென்று கொண்டிருந்தன. Hard Shoulders இடல் இந்த அளவீட்டு பத்திரத்தின் உருப்படிகளில் (BOQ Item) உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவற்றினை செயற்திட்டத்தின் கடன் ஏற்பாட்டின் கீழ் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. இவ்விடங்களில் Hard shoulders இடுவதன் மூலம் வீதியின் நிலைத்திருதன்மையை மேம்படுத்தப்பட முடியுமென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தம் அளிப்பு தாமதமாகியமை மற்றும் செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் ஒப்பந்தக்காரரின் செயற்திறனின்மை காரணமாக வீதி நிர்மாண நடவடிக்கைகளை உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போயிருந்தது. செயற்திட்ட காலப்பகுதியில் கடன் நிதியேற்பாட்டினை செயற்திட்டத்தின் நோக்கத்திற்காக பயன்படுத்த முடியாது போயிருந்தது.

(ii) மத்திய மாகாண வீதி நிர்மாண செயற்திட்டத்தின் III ஆம் கட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட I மற்றும் II கட்டத்தின் கீழ் பூர்த்தி செய்து வெற்றியளிக்காத 04 வீதியின் பகுதிகளை மீண்டும் நிர்மாணிப்பதற்கு திட்டமிட்டு பொறியிலாளர் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 2015 ஆகஸ்ட் மாதத்தின் போது ரூபா 1.73 மில்லியன் செயற்திட்ட நிதியிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த வீதியின் பகுதிகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்களை கையளிக்கும் போது ஒப்பந்தக்காரர்கள் வீதியின் 3 பிரிவுகளுக்காக ரூபா 50.28 மில்லியன் கூட்டுத்தொகைக்கு கூறுவிலைகளை சமர்ப்பித்திருந்தனர். செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் ரூபா 8.59 மில்லியன் பெறுமதியான CP 3-2 பக்கேஜின் கீழான வீதி பகுதியின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்திலிருந்து விலகிய (Approved Shopping List) முன்மொழிவு அடிப்படையிவ் மத்திய மாகாண சபைக்காக ரூபா 29.83 மில்லியன் தொகையான vogels வகையிலான Asphalt Premix Paver இயந்திரமொன்று 2014 சனவரி 14 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வியந்திரம் 2015 திசெம்பர் 22 ஆந் திகதி வரையிலும் 05 நாட்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்ததாக கண்டறியப்பட்டது. பெறுமதியில் கூடிய இச் சொத்துக்கள் 02 ஆண்டு காலமாக குறைப்பயன்பாட்டுடன் காணப்படுவதாகவும் இச் சொத்துக்களுக்காக செலவிடப்பட்ட வெளிநாட்டுக் கடன் மற்றும் வட்டி செலுத்துவதற்கு நேர்ந்திருந்ததாகவும் இயந்திரத்தை செயற்படுத்துவதற்கு தேவையான

வளங்கள் இல்லாமை காரணமாக மேற்படி சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(iv) அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டம் (Approved Shopping list) பிரகாரம் ரூபா 12.00 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த 2000 லீற்றர் கொள்வனவு உடைய 04 தார் விசிறும் பௌசர் இயந்திரங்களை (Bitumen Sprayers) கொள்வனவு செய்ய முடியாமல் இருந்தது. அதனைக் காரணமாக கொண்டு செயற்திட்ட நிதியினை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்த முடியாமல் இருந்தது.

**(ஆ) மாகாண வீதி செயற்திட்டம் (கூட்டிணைப்பு அலகு)**

உலக வங்கி கடன் மானியங்களின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த மாகாண வீதி செயற்திட்டத்தின் பூர்த்தியினை செய்வதற்கு அண்மிக்கும் ரூபா 12.94 மில்லியன் செலவு செய்து 2015 மார்ச் 28 ஆந் திகதி முதல் ஏப்ரல் 04 ஆந் திகதி வரை சீனாவில் நடைபெற்ற பயிற்சி பாடநெறியொன்றுக்கு 10 உத்தியோகத்தர்கள் சமுகமளித்திருந்தனர். அச்செலவினம் 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான கணக்கு கூற்றுக்களில் பயிற்சியளித்தலின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஒக்தோபர் 11 ஆந் திகதிய மு.கி.அ 01/2010/01 ஆம் இலக்க நிதி திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் தெளிவாக உத்தியோகத்தரொருவரின் தகைமைகள், அறிவு மற்றும் திறமைகள் என்பவற்றின் அபிவிருத்திக்கு உரிய நிகழ்ச்சித்திட்டங்களுக்காக வெளிநாடு செல்லும் போது அமையப் படிகளாக நாளொன்றுக்கு 30 டொலர்கள் வீதம் பெற்றுக்கொள்ள முடியுமான போதிலும், அச் சுற்றறிக்கைக்கு முரணாக நாளொன்றுக்கு 50 டொலர் வீதம் மேலதிகமாக 1600 டொலர்கள் (ரூபா 224,000) செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மேற்படி பயிற்சி பாடநெறிக்காக தாய்லாந்து கல்வி நிறுவனமொன்றான Asian Institute of Technology (AIT) தெரிவு செய்யப்பட்டு அவர்களின் இலங்கை முகவராக குறிப்பிடப்பட்டு Multiple Challenge Management Intenational (MCMI) எனும் பெயரிலான நிறுவனத்திற்கு 55,000 டொலர் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே MCMI நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பட்டியலில் குறிப்பிடப்பட்ட முகவரியில் அவ்வாறான நிறுவனமொன்று இல்லையெனவும், உரிய காலப்பகுதியில் தாய்லாந்தின் AIT நிறுவனம் அவ்வாறான பாடநெறியொன்றை நடாத்தவில்லையெனவும் 55,000 டொலர் AIT நிறுவனத்திற்கு கிடைக்கவில்லையெனவும், இக் காலப்பகுதியில் AIT நிறுவனத்தில் பயிற்சி பாடநெறிக்காக இந்த உத்தியோகத்தர்கள் சமுகமளிக்கவில்லையெனவும் இவ்வாறான பாடநெறியொன்று தொடர்பாக AIT நிறுவனம் மற்றும் இலங்கையின் MCMI நிறுவனத்திற்கிடையே இணக்கப்பாடொன்று இல்லையெனவும் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**(இ) வடக்கு வீதி இணைப்பு செயற்திட்டம்**

மன்னார் மாவட்டத்தின் NP2R மற்றும் NP9 ஆகிய 38.5 கிலோ மீற்றர் நீளம் கொண்ட 2 வீதி பொதிகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த திகதியான 2016 சனவரி 10 ஆந் திகதி வரையிலும் வீதியின் அரைப் பகுதிக்கு

அண்மிய அளவிலேனும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பௌதீக செயலாற்றல் 31 சதவீதம் மற்றும் 25 சதவீதம் போன்ற மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

**(உ) வடக்கு வீதி இணைப்பு செயற்திட்டம் (மேலதிக நிதியேற்பாடு)**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு முரணாக வடமத்திய மாகாண செயற்திட்டங்களை செயற்படுத்தும் பிரிவின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத 3 பதவிகளுக்காக அவர்களின் சம்பளத்தில் 1/6 பங்கு செயற்பாட்டு மற்றும் மேற்பார்வை பதவியணியினர் படிகளாக ரூபா 305,908 தொகை 2015 ஆம் ஆண்டின் போது வடமத்திய மாகாண சபையின் மூன்று உறுப்பினர்களுக்கு ஆளுநரின் அங்கீகாரத்தின் பேரில் செயற்திட்ட நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

(ii) கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு வீதி பொதியொன்றினது பௌதீக செயலாற்றல் 21 சதவீதமான குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், முல்லைதீவு மாவட்டத்தின் வீதியொன்றில் ஒப்பந்தச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டு 2½ ஆண்டுகளுக்கும் பின்னர் வழங்கப்பட்டிருந்தது. அதன் பௌதீக செயலாற்றல் 1 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாகவும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயன்முன்னேற்ற அறிக்கை ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ஊ) பாடசாலை கல்வி முறைமையை அறிவின் கேந்திர நிலையமாக மாற்றியமைக்கும் செயற்திட்டம் (ரீஎஸ்ஈபீ)**

செயற்திட்டத்தின் செயற்பாடு மற்றும் முகாமைத்துவ ஒத்துழைப்பு பிரிவின் 07 உத்தியோகத்தர்களுக்காக செயற்திட்ட உத்தியோகத்தர்களுக்கு உரித்தற்ற தொலைபேசி படிகளாக ரூபா 247,500 தொகை 2015 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக இந்த உத்தியோகத்தர்களுக்காக இணையத்தள வசதிகளுடனான டொங்கல் இணைப்பு வழங்கப்பட்டிருந்ததுடன், 11 மாத காலப்பகுதிக்குரிய ரூபா 171,816 தொகையான பட்டியல் செயற்திட்டத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 3.5 செயலாற்றல்

2015 இன் வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அமைச்சின் செயல்முன்னேற்றம் தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்**

அமைச்சின் பிரதான செயற்பாடுகள் நிறைவேற்றப்படாத மற்றும் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் சில கிழே காட்டப்பட்டுள்ளன.

(i) **தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி நிலையம்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 04 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 0 சதவீதமாகவும் 03 செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் 20 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் வரையான வீச்சில் மிகவும் பலவீமான மட்டமொன்றில் காணப்பட்டன.

- 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் 05 செயற்திட்டங்களுக்காக எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ரூபா 29.20 மில்லியனால் விஞ்சி ரூபா 15.24 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததாக செயன்முன்னேற்ற அறிக்கை பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ii) **உள்ளூராட்சி பிரிவு**

------------------------------------

இப் பிரிவின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2015 செப்தெம்பர் 07 ஆந் திகதி முதல் 13 ஆந் திகதி வரை பெயரிடப்பட்டிருந்த உள்ளூராட்சி வாரத்திற்காக ஒவ்வொரு தினத்திற்காக வெவ்வேறு தலைப்பின் கீழ் நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி மன்ற ஆணையாளர்கள் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படவில்லை.

- உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையே போட்டிகளை நடாத்துவதற்காக 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 15 மில்லியனான நிதி ஏற்பாடுகளில் ரூபா 5.44 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 05 மாகாணங்களில் மாத்திரம் இப்போட்டியை நடாத்தி அம்மாகாணங்களுக்கான செயற்திட்டங்களை செயற்படுத்த நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது

**(iii) அபிவிருத்தி பிரிவு**

---------------------------------

இப்பிரிவின் செயலாற்றல் பரிசோதனையின் பொது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

- ஹம்மன நகர அபிவிருத்திக்காக 30 செயற்திட்ட செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 18.72 மில்லியன் செலவிடப்பட்டு 18 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 14.54 மில்லியனான 07 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. 05 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- தெஹிவிட்ட நகர அபிவிருத்திக்காக 07 புதிய செயற்திட்டங்களில் ரூபா 34.56 மில்லியன் பெறுமதியான 3 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் 2 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- 2015 ஆம் ஆண்டில் பள்ளேபொல நகர அபிவிருத்திக்காக 4 புதிய செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 35.5 மில்லியனான 3 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- பெலிஅத்த நகர அபிவிருத்தியின் நகர வசதிகள் வழங்கல் நிலைய நிர்மாண செயற்திட்டத்திற்காக ரூபா 84.82 மில்லியன் மீளாய்வாண்டின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- அக்கரைப்பற்று நகர அபிவிருத்திக்காக 15 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 3 செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றம் 20 சதவீதமான மிகவும் பலவீனமான மட்டமொன்றில் காணப்பட்டதுடன் செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- வடக்கு, கிழக்கு உள்ளுராட்சி நிறுவனங்களின் புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 54.52 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதில் 05 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 10 செயற்திட்ட செயற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. அதில் 04 செயற்திட்டங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி அளவிலும் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன் அதன் செயன்முன்னேற்றம் 20 சதவீதம் முதல் 60 சதவீதம் வரையான வீச்சிலான பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது.

- அவசர அனர்த்த பொறுப்பேற்றல் தளத்தை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டின் 08 தொடர் வேலை செயற்பாடுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அதில் 06 செயற்திட்டங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2015 ஆம் ஆண்டிற்காக 04 தொடர்வேலை செயற்திட்டங்கள் உள்ளடங்களாக ரூபா 120 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

- பிரதேச சபைகளை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 1,400 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் 855 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும் இந் நிகழ்ச்சித்திட்டத்தில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 58 சதவீதமான நிதி முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பௌதீக செயலாற்றல் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) புகை இயந்திரத்தை கொள்வனவு செய்தலும் பகிர்ந்தளித்தலும்

தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் மூலம் பெயரிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்த அனர்த்த சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பிரிவுகளிற்காக 2015 யூன் மாதத்தில் 24 புகை இயந்திரங்களும் 2015 ஒக்தோபர் மாதத்தின் போது மீண்டும் 11 புகை அடிக்கும் இயந்திரங்களுமாக கொள்வனவு செய்யப்பட்டு பகிரப்பட்டிருந்தன. 2016 மே மாதம் அளவில் முதலில் வழங்கப்பட்ட 24 இயந்திரங்களில் 03 இயந்திரங்களுக்கும்,

இரண்டாவதாக வழங்கப்பட்ட 11 இயந்திரங்களில் 7 இயந்திரங்களுக்கும் பொருள் பெறுவனவு குறிப்புக்கள் அமைச்சிற்கு கிடைத்திருக்கவில்லை.

**(ஆ) கொம்போஸ்ட் சலிக்கும் இயந்திரங்களை கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும்**

---

கொம்போஸ்ட் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள உள்ளுராட்சி நிறுவனங்களுக்காக 20 கொம்போஸ்ட் சலிக்கும் இயந்திரங்கள் ஒரு வருட உத்தரவாத காலத்திற்கு உட்பட்டு ரூபா 6,682,640 இற்கு 2015 ஒக்தோபர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. 8 உள்ளுராட்சி நிறுவனங்களினால் 2016 மே மாத இறுதி அளவிலும் அவ்வியந்திரங்களை ஸ்தாபித்து செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 04 இயந்திரங்கள் 04 ஏனைய உள்ளுராட்சி நிறுவனங்களுக்கு மாற்றி அனுப்பி வைக்கப்பட்டு, செயற்பாட்டு நிலையில் காணப்பட்டதுடன், எஞ்சிய 4 இயந்திரங்களும் 2016 யூலை 28 ஆந் திகதி வரையிலும் அந்த இடங்களில் விளைவற்றுக் காணப்பட்டன. தேவைப்பாட்டை இனங்காணாமல் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

---

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

---

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 35 | 25 | 10 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 152 | 148 | 04 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 55 | 75 | - | 20 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | மொத்தம் | **245** | **250** | **16** | **21** |